DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**ST.C.No.472/2022 P.W. 1 ஷோபனா க/பெ. ரமேஷ்குமார்**

நாள் 25.06.2025

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு 2014 ல் ரமேஷ்குமார் என்பவருடன் திருமணம் நடைப்பெற்றது இன்றளவும் எனது கணவருடன் வாழ்ந்து வருகிறேன் என்றால் சரிதான். எனது கணவர் பெயரை இந்த வழக்கின் வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது கணவரின் அம்மா அப்பா பெயர் என்ன என்றால் அம்மா பெயர் மல்லிகா, அப்பா பெயர் பெரியநாயகம். அவர்கள் என்னுடன் வசிக்கிறார்களா என்றால் அவர்கள் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக தஞ்சாவூரில் வசித்து வருகிறார்கள். நானும், எனது கணவரும் கடந்த 8 ஆண்டுகளாக மன்னார்குடியில் அன்னவாசல் தெருவில் வசித்து வருகிறோம். எனது புகாரிலும், வழக்கறிஞர அறிவிப்பிலும், ஆணையுறுதி ஆவணத்திலும் சொல்லப்பட்டுள்ள மன்னார்குடி அண்ணா நகர், கதவிலக்கம் 48 என்ற முகவரியில் வசிக்கவில்லை அது எனது அப்பா வீட்டு முகவரி ஆகும். எதிரியின் முகவரி என்ன என்றால் எனக்கு தெரியாது. ஆனால் தஞ்சாவூர். இந்த வழக்கில் எதிரியின் முகவரியாக சொல்லப்பட்டுள்ள முகவரி எதிரியினுடைய நிரந்தர முகவரி அல்ல என்றால் சரியல்ல. அங்க தான் இருக்கிறார். இந்த வழக்கினுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும் சொல்லப்பட்டுள்ள முகவரியும் எதிரியினுடைய முகவரி அல்ல என்று சொன்னால் சரியல்ல. அங்கு தான் வசித்து வருகிறதாக சொன்னார். எதிரியை நா்ன சந்திக்கவில்லை என்றாலும், எதிரிக்கு எந்தவொரு கடன் தொகையும் கொடுக்கவிலலை என்றாலும், அதற்காக அவர் எந்த காசோலையும் கொடுக்கவில்லை என்றாலும் அதனால் தான் தவறான முகவரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பும், நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கு இந்நீதிமன்றத்தில் பிடிக்கட்டளை பிறப்பிக்கப்பட்ட போது அதனால் எதிரி முன்னிலையானபோது அவருடைய முகவரியை உறுதிசெய்யும் வகையில் எதிரியினுடைய ஆதார் அடடையை இணைத்து தாக்கல் செய்துள்ளார் என்றும், அந்த ஆதார் அட்டை 10 ஆண்டுகளுக்கு முன்பு எதிரியால் வாங்கப்பட்டது எனறால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் எதிரி எனது கணவரின் நெருங்கிய

நண்பர். எனது மாமானார், மாமியார் தஞ்சாவூரில் என்ன வேலை செய்கிறார்கள் என்றால் எனது மாமானார் செய்தி மக்கள் தொடர்பு துறையில் பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்றுள்ளார். எனது மாமியார் உடல்நிலை சரியில்லாத மாமானாரை வீட்டில் இருந்து கவனித்து வருகிறார். எனது மாமியார் தஞ்சாவூரில் பெரும் வட்டித்தொழில செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது கணவர் எங்கு இருக்கிறார், என்ன வேலை செய்கிறார் என்றால் எனக்கு திருமணம் ஆன 2014ம் வருடம் முதல் வெளிநாட்டில் இருந்து வருகிறார். அவர் அவ்வபோது வந்து செல்வார். நான் வட்டித்தொழில் செய்பவர் அல்ல. எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லும் தொகை எந்த தேதியில், எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என்று புகாரிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ, ஆணையுறுதி ஆவணத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி என்ன தொழில் செய்கிறார் என்றோ, எந்த காரணத்திற்காக கடன் பெற்றார் என்ற விபரங்கள் எதையும் நான் எனது புகாரிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ, ஆணையுறுதி ஆவணத்திலோ குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எதிரி எனக்கு கொடுத்ததாக சொல்லப்படும் காசோலையை எங்கு வைத்து எப்போது கொடுத்தார் என்று நான் எனது புகாரிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ, ஆணையுறுதி ஆவணத்திலோ குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் வருமான வரி கணக்கு தாக்கல் செய்கிற நபரா என்றால் இல்லை. எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் தொகை எனக்கு எவ்வாறு கிடைத்தது என்று (நகை அடகு வைத்தாகவோ, வங்கியில் இருந்து எடுத்ததாகவோ, சேமிப்பில் இருந்து கொடுத்தாகவோ) நான் எனது புகாரிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ, ஆணையுறுதி ஆவணத்திலோ குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. என்னால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் உள்ள அறிவிப்பு, புகார், ஆணையுறுதி ஆவணம் ஆகியவற்றில் ஜெய்சீலன் என்பவர் மனைவி என்று குறிப்பிடப்பட்டு பின்னர் அடித்து திருத்தப்பட்டு ஜெய்சீலன் என்பவர் மகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரியினுடைய வழக்கில் கண்ட காசோலையில் EXP.1 எதிரியினுடைய கையெழுத்தானது ஊதாநிற மையினால் நிரப்பப்பட்டுள்ளது. இந்த காசோலையில் கண்ட என்னுடைய பெயர், தொகை , தேதி எதிரியால் நிரப்பப்பட்டது அல்ல என்றால் சரிதான். மேற்படி விபரங்கள் என்னால் நிரப்பப்பட்டது என்று சொன்னால் சரிதான். இந்த காசோலையின தொகையை என்னிடம் இருந்து பெறவில்லை என்றும், அதற்காக எந்த வொரு காசோலையும் கொடுக்கவில்லை என்றால் என்னுடைய மாமியார்

வீட்டில் வைத்து என்னிடம் தான் கொடுத்தார். மேற்படி விபரத்தை புகாரிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ, ஆணையுறுதி ஆவணத்திலோ சொல்லவில்லை என்றும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியிடம் நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் விவரம் எனது கணவருக்கோ, எனது மாமியார், மாமனார்கோ தெரியுமா என்று எனது புகாரிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ, ஆணையுறுதி ஆவணத்திலோ குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எனக்கும், எதிரிக்கும் நேரடியாக வரவு செலவு இல்லை என்றும், எதிரி காசோலை கொடுக்கவில்லை என்றும் எனது மாமியார் மூலம் பெறப்பட்டு என்னை கருவியாக பயன்படுத்தி எதிரிக்கு எதிாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது மாமியாருக்கும், எதிரிக்கு தான் நேரடியாக பழக்கம் என்றாலும், எனக்கும் , எதிரிக்கும் எவ்வித பழக்கம் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரியினுடைய முகவரியானது நெ.294/பி(1), இந்திராணியக்கா சந்து, வடக்கு ஆஜாராம், தஞ்சாவூர் மேற்கு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள எண்.211/2, இராமநாதபட் சந்து, நான்குகால் மண்டபம், தஞ்சாவூர் என்ற முகவரியும் எங்கு உள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி இரண்டு முகவரிகளுக்கும் உள்ள தூரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு எதிரி மீது வேண்டும் என்றே பொய்யாக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,

Judicial Magistrate No.I,

Mannargudi.